**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 216/2015**
**மற்றும்**
**அசல் வழக்கு எண் 98/2018**
**நாள் 01/02/2025 சனிக்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – சேகர் குருக்கள் | த/பெயர் – ராமநாத குருக்கள் |
| வயது – 65 | தொழில் – |
| விலாசம் – சிவன் கோயில் தெரு, பெருவாயல் | |

**2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் இந்த வழக்கை இந்து அறநிலைய துறைக்கு எதிராக தாக்கல் செய்து என்னை விசாரணை செய்யாமல் வழங்கப்பட்ட உத்தரவு என்னை கட்டுப்படுத்தாது என உத்தரவு பிறப்பிக்க கோரி தாக்கல் செய்துள்ளேன். என்னுடன் சேர்த்து உடன்பிறந்தவர்கள் மொத்தம் 3 பேர். எனது இரு சகோதரர்கள் வேலைக்கு செல்கிறார்கள் நான் வேலைக்கு செல்வதில்லை. 1ம் பிரதிவாதி வேலைக்கும் செல்லவார் குடும்பத்தையும் பார்த்துக்கொள்வார். நான் தாக்கல் செய்துள்ள உயிலில் நான் வேலைக்கு செல்லாமல் வீட்டில் இருப்பதால் பரம்பரை அறங்காவலர் வேலையை பார்க்கும் படி கூறியுள்ளார். அந்த உயிலில் நான் எனது தந்தைக்கு உதவியாக பரம்பரை அறங்காவலர் பணியை செய்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது தந்தை 2004ல் இறந்தார். இறந்த தேதி ஞாபகம் இல்லை. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள எனது தந்தை இறந்த தேதியும் இறப்பு சான்றிதழில் உள்ள இறந்த தேதியும்

மாறுபட்டுள்ளது என்றால் ஞாபகம் இல்லை. இந்த அறநிலைய துறையின் கீழ் தாவா கோயில் வருவதால் அதில் ஏற்ப்படும் பிரச்சனைகளை இந்து அறநிலைய துறை ஆணையாளர், இணை ஆணையாளர், துணை ஆணையாளர் ஆகியோர்களிடம் மனு செய்து தான் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்றால் அவர்களிடம் கொடுத்த மனுவின் பெயரில் விசாரணை செய்யாததால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். நான் கூறுவது தவறு என்றும் நாங்கள் கொடுத்த மனுவின் பெயரில் 22.05.2014 ம் தேதி எங்களை விசாரணைக்கு ஆஜராகுமாறு 3 ம் பிரதிவாதி அறிவிப்பு அனுப்பியுள்ளார் அதன் பெயரில் அன்றைய தேதியில் நாங்கள் ஆஜரானோம் என்றால் நான் ஆஜர் ஆனேன் ஆனால் என்னை விசாரணைக்கு அலுவலகத்திற்கு உள்ளே அழைக்கவில்லை. அன்றைய தேதியில் விசாரணையின் அடிப்படையில் ஒரு உத்தரவு பிறப்பித்தனர். மேற்படி உத்தரவில் நானும் 1 ம் பிரதிவாதியும் சேர்ந்து பரம்பரை அறங்காவலர் மற்றும் பூசாரியாக இருக்குமாறு உத்தரவு பிறப்பித்தனர். மேற்படி உத்தரவை எதிர்த்து நான் இந்து அறநிலைய துறை ஆணையரிடம் மேல் முறையீடு செய்தேன். அங்கு நான் தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது. தற்போதைய இந்த அறநிலையதுறை உத்தரவின் படி 1 ம் பிரதிவாதியும் ஒரு அறங்காவலர் என்றால் சரிதான். இவ்வழக்கின் 3 ம் பிரதிவாதி பிறப்பித்த உத்தரவாக தாக்கல் செய்யப்பட்டுள்ள 7 வது ஆவணம் ஆனது அவ்வாறு இ,ல்லாமல் தாங்கள் தாக்கல் செய்துள்ள 6 வது ஆவணத்தின் பிரதியே என்றால் சரிதான். இந்து அறநிலைய துறை கட்டுப்பாட்டின் கீழ் தாவா கோயில் வருவதால் அறங்காவலர் பிரச்சனையை பொருத்து இந்து அறநிலைய துறை துணை மற்றும் இணை ஆணையர் மட்டுமே தீர்வு செய்ய அதிகாரம்

படைத்தவர்கள் என்றும் எனவே அவர்களிடம் தான் மேற்படி பிரச்சனையை தாக்கல் செய்திருக்கவேண்டும் என்றும் அவ்வாறு இல்லாமல் இந்த வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு நான் மட்டும் அல்லாமல் மேலும் 2 வாரீசுகள் உள்ளதால் எனக்கு மட்டும் அறங்காவலர் பதவி பாத்தியம் என்று கூறுவது சட்டபடி ஏற்ப்புடையது அல்ல என்றால் சரியல்ல. இந்து அறநிலைய துறை சட்டம் பிரிவு 108 ன் கீழ் இந்த வழக்கு தாக்கல் செய்ய எனக்கு உாிமை இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் அவர்களுடைய சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு சரியான முறையில் விசாரணை மேற்க்கொண்டு உத்தரவு பிறப்பித்துள்ளதால் அதற்கு எதிராகவும் பிரதிவாதிகளுக்கு எதிராகவும் இவ்வழக்கை தாக்கல் செய்ய எந்த ஒரு முகாந்திரமும் உாிமை மூலமும் இல்லாத காரணத்தால் அவர்களுக்கு எதிராக இந்த வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**